<u>**Sub Court, Eraniel**</u>

O.S. No.19/2025
Date: 27.07.2026
PW.1 - திரு.ரமேஷ்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

<u>3 மற்றும் 4ம் பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

இந்த வழக்கில் எத்தனை பட்டிகை சொத்து உள்ளது என்றால், 2 பட்டிகை சொத்துகள் உள்ளது. 2ம் பட்டிகை சொத்தின் சர்வே எண் என்ன என்றால், நியாபகம் இல்லை. அதன் 4 பக்க எல்கைகள் தெரியுமா என்றால், திசை தெரியாது. முன் பகுதி ரோடு உள்ளது. என்னால் திசையை சரியாக சொல்ல முடியவில்லை. 2ம் பட்டிகை சொத்தில் தற்பொழுது என்ன இருக்கிறது என்றால், வீடு இருக்கிறது. 2 மாடிகள் கொண்ட வீடு இருக்கிறது என்றால், ஆமாம். இந்த வழக்கு தாக்கல் செய்யும் பொழுது அந்த வீடு இருந்ததா என்றால், இருந்தது.

வழக்கு தாக்கல் செய்யும் பொழுது அந்த சொத்து காலி மனை என்று சொல்லி இருக்கிறேன் என்றால், நான் பார்க்கும் பொழுது வீடு கட்டுவதற்கு foundation போட்டிருந்தார்கள். நான் எந்த தேதியில் பார்க்கும் போது Foundation போட்டுக் கொண்டிருந்தார்கள் என்றால், ஜனவரி மாதம் 2025ல் தேதி நியாபகம் இல்லை. அந்த கட்டிடம் இந்த வழக்கின் 4ம் பிரதிவாதி சிவப்பிரதீஷ் கட்டியது என்றால், ஆமாம். அந்த வீட்டில் அவர் குடும்பத்துடன் தாமசிக்கிறார் என்றால், யார் தாமசிக்கிறார்கள் என்று எனக்கு தெரியாது. இந்த வழக்கில் நான் என்ன பரிகாரம் கேட்கிறேன் என்றால், என் அப்பாவுடைய பாகத்தை தான் கேட்கிறேன். யாருக்கு எதிராக நான் பாகம் கேட்கிறேன் என்றால், என் அப்பாவுடைய பங்கு என் பங்கு என்று கேட்கிறேன். என் அப்பா உயிருடன் இருக்கிறாரா என்றால், ஆமாம். அவர் தான் 1ம் பிரதிவாதி என்றால், ஆமாம். அவர் உயிருடன் இருக்கும் பொழுது அவருடைய சொத்தில் நான் பாகம் கேட்க முடியா என்றால், முடியும். என் அப்பாவிற்கு அந்த சொத்து எப்படி கிடைத்தது என்றால், என் தாத்தா மூலம் கிடைத்தது. என் தாத்தாவின் பெயர் என்ன என்றால், சுப்பிரமணி நாடார். அவர் உயிருடன் இருக்கிறாரா என்றால், இறந்து விட்டார். அவர் எந்த ஆண்டு இறந்தார் என்றால், அது எனக்கு தெரியாது. இறந்ததற்கு தகவல் எனக்கு தரவில்லை. நான் எப்போது இறந்தார் என்று விசாரித்து தெரிந்து கொண்டேனா என்றால், அவர் இறந்த விபரமே 2 வருடம் கழித்து தான் தெரியும். யாருமே சொல்லவில்லை. நான் பிறந்த பிறகு இறந்தாரா அல்லது அவர் இறந்த பிறகு நான் பிறந்தேனா என்றால், நான் பிறந்த பிறகு தான்

அவர் இறந்தார். நான் அவரை பார்த்திருக்கிறேனா என்றால், இவர் தான் என் தாத்தா என்று எனக்கு தெரியாது. நான் பிறந்த 3 வது மாதத்தில் என்னையும் என் அம்மாவையும், அப்பா அடித்து துரத்தி விட்டார். சுப்பிரமணிய நாடாருக்கு எத்தனை ஆண் பிள்ளைகள் உண்டு என்றால், 4 பேர்கள். செல்லப்பன், கணபதி, முருகன் மற்றும் கிருஷ்ணகுமார் என்றால், ஆமாம். அவருக்கு எத்தனை பெண் பிள்ளைகள் உண்டு என்றால், எத்தனை பேர் என்று எனக்கு தெரியாது . ஆனால் தற் பொழுது 4 பெண் பிள்ளைகள் உயிருடன் இருக்கிறார்கள். அவர்கள் பெயர் என்ன என்றால், 2 பேர்களின் பெயர் மட்டும் தான் தெரியும். அவர்கள் ஒன்று பூத்தங்கம் மற்றொன்று லட்சுமி. சுப்பிரமணிய நாடாருக்கு லட்சுமி என்ற மகளே கிடையாது என்றால், தவறாக சொல்லி விட்டேன் அவர் பெயர் லட்சுமி இல்லை பார்வதி. அது போக கனகம், ரஞ்சிதம் என்ற இரண்டு மகள்கள் உண்டு என்றால், தெரியாது. எனக்கு உறவினர்கள் என்று யாரும் சொல்லியதில்லை. சுப்பிரமணிய நாடார் எத்தனை திருமணம் செய்து கொண்டார் என்றால், இரண்டு. அவருக்கு முதல் தாரம் மூலமாக செல்லாட்சி மற்றும் முத்தம்மாள் என்றால், எனக்கு தெரியாது. பாகப்பிரிவினை வழக்கு போட வேண்டும் என்றால், எல்லா வாரீசுகளை கட்சி சேர்க்க வேண்டும் என்றால், எனக்கு தெரிந்தால் தான் எல்லாரையும் சேர்க்க முடியும். நான் எந்த வருடம் பிறந்தேன் என்றால், 1981. 1981 ல் நான் பிறந்ததாக காட்ட பள்ளி சான்றிதழோ அல்லது பிறப்பு சான்றிதழோ உண்டா என்றால், உண்டு. தாக்கல் செய்தேனா என்றால், இல்லை. சுப்பிரமணிய நாடாரின் இறப்பு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. சுப்பிரமணிய நாடாருக்கு குடும்ப வீடு இருந்ததா என்றால், உண்டு. ஓலைக்குடிசை வீடு உண்டு. அது எந்த பஞ்சாயத்தில் இருந்தது என்றால், எந்த பஞ்சாயத்து என்று எனக்கு சரியாக தெரியவில்லை. அந்த இடத்தில் தான் 4 ம் பிரதிவாதி வீடு கட்டி இருக்கிறார்.

4 ம் பிரதிவாதி யார் என்றால், நான் 4 ம் பிரதிவாதி என்று கூறியது 4 வது மகன் கிருஷ்ணகுமாரை. 4 ம் பிரதிவாதி கிருஷ்ணகுமார் இல்லை என்றால், நான் 4 வது மகன் கிருஷ்ணகுமார் என்பதை தான் 4 வது பிரதிவாதி என்று மேலே சொல்லி விட்டேன். குடும்ப வீட்டின் நம்பர் தெரியுமா என்றால், தெரியாது. அந்த வீடு தற்பொழுது இருக்கிறதா என்றால், அதை இடித்து விட்டு தான் கிருஷ்ணகுமார் வீடு போட்டிருக்கிறார். நான் அந்த வீட்டில் பிறந்தேனா என்றால், ஆமாம். என்னுடைய ஆதார் அட்டையிலும், பிறப்பு சான்றிதழிலும், பிறந்த இடம் தெரியும் என்றால், மருத்துவமனையில் பிறந்தால், மருத்துவமனை என்று போடுவார்கள். நான் வழக்கில் சொல்லியுள்ளது போல் கூட்டுக்குடும்பம்

இல்லை என்றால், கூட்டுக்குடும்பமாக இருந்தது தான் இப்போது எல்லோரும் தனித்தனியாக போய் விட்டார்கள். எத்தனை வருடங்கள் கூட்டுக் குடும்பமா இருந்தோம் என்றால், நான் 3 மாத குழந்தையாக இருக்கும் போதே என் அம்மாவை கைகுழந்தையுடன் விரட்டி விட்டதால் எத்தனை வருடங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தார்கள் என்று என்னால் சொல்ல முடியாது. என் கூற்றுபடி 1981ல் கூட்டுக் குடும்பத்தில் இருந்து நான் வெளியேறிவிட்டேன் என்றால், ஆமாம். 1ம் பிரதி கணபதிக்கு குடும்ப வீடு கிடையாது என்றால், ஆமாம். நான் தற்போது எங்கு வசிக்கிறேன் என்றால், மண்டைக்காடு, மணலிவிளையில் வசிக்கிறேன். எத்தனை வருடமாக வசிக்கிறேன் என்றால், 45 வயதான பிறகும் அங்கு தான் வசிக்கிறேன். இந்து கூட்டுக் குடும்பமாக இருந்ததை காண்பிக்க என்னிடம் ஆவணங்கள் இருக்கிறதா என்றால், இல்லை. 1ம் பிரதிவாதி கணபதியும், நானும் தனித்தனியா தான் வசித்து வருகிறேன் என்றால், ஆமாம். இந்து வாரீசு உரிமைச் சட்டபடி உரிமை அடைவதற்கு முதல் வகுப்பு வாரீசுதாரர்கள் மகன் மற்றும் மகள் என்றால், பெயரனுக்கு தான் முதலில் வரும். மகனும், மகளும் உயிருடன் இருக்கும் பொழுது பெயரனுக்கு எந்த உரிமையும் வராது என்றால், சரியல்ல.

தாத்தா சொத்தில் பெயரனுக்கு தான் முழு உரிமை. இந்த வழக்கில் பாகப்பிரிவினை ஆவணம் தாக்கல் செய்திருக்கிறேன் என்றாலும், அது 1993ல் நடந்த பாகப்பிரிவினை என்றாலும், ஆமாம். 1999ம் வருடம் எனக்கு 18 வயது பூர்த்தியாகிவிட்டது என்றால், ஆமாம். எனக்கு எதாவது உரிமை இருந்திருந்தால் 1999 ல் இருந்து 3 ஆண்டுகளுக்குள் உரிமை கோரியிருக்க வேண்டும் என்றால், அப்போது என் அப்பா தருகிறேன் என்று சொன்னார். சென்ற வருடம் தான் தரமுடியாது என்று சொல்லி விட்டார். 1993 ல் நடைபெற்ற பாகப்பிரிவினையை நான் தற்பொழுது கேள்வி எழுப்ப முடியாது என்றால், சரியல்ல. அந்த பாகப்பிரிவினை ஆவணம் பதிவு செய்யப்பட்டதா என்றால், ஆமாம். பதிவு செய்யப்பட்ட ஆவணத்தை கேள்வி எழுப்ப வேண்டும் என்றால், 3 ஆண்டிற்குள் கேள்வி எழுப்ப வேண்டும் என்றால், எனக்கு தெரிந்த பிறகு தான் கேள்வி எழுப்ப முடியும். நான் 2024ல் தான் பாகப்பிரிவினை பற்றி தெரியும் என்று சொல்வது காலவரையறை சட்டத்தில் இருந்து பாதுகாத்து கொள்வதற்காக அப்படி சொல்கிறேன் என்றால், எனக்கு 2025ல் தான் தெரியும் அதன் பிறகு தான் நான் வழக்கு தாக்கல் செய்தேன். நான் 2025ல் தெரியும் என்று சொல்வது முழு பொய் ஆகும் என்றால், அது சட்டத்தின் படி நிலைக்காது என்றால், சரியல்ல. நான் சொல்வது தான் உண்மை. வழக்கின் 2வது பட்டிகை சொத்தை

எனது அப்பா 17.07.2000ல் 3ம்பிரதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால், எனக்கு பாகம் கொடுக்க வேண்டும். அந்த சொத்து என் அப்பாவுடைய முழு உரிமை உடைய சொத்து என்றாலும், அது கூட்டு குடும்ப சொத்து இல்லை என்றாலும், என் அப்பா சுயமாக சம்பாதித்து எந்த சொத்தும் வாங்கவில்லை அது என் தாத்தாவின் சொத்து. என் அப்பா 3ம் பிரதிக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால், இல்லை. 3ம் பிரதிவாதி கிரயம் பெற்றதில் இருந்து 8 ஆண்டுகள் கழித்து 4ம் பிரதிக்கு கிரயம் எழுதி கொடுத்தார் என்றால், ஆமாம். அதை தான் நான் தாக்கல் செய்திருக்கிறேன்.

2ம் பட்டிகை சொத்து யாருடைய பெயரில் பட்டா இருக்கிறது என்றால், நான் அதை படித்து பார்க்கவில்லை நீதிமன்றத்தில் சமர்ப்பித்து இருக்கிறேன். பட்டா மற்றும் கரம் ரசீது எல்லாம் தற்பொழுது 4ம் பிரதி பெயரில் இருக்கிறது என்றால், எனக்கு தெரியாது. நான் ஆவணங்கள் தாக்கல் செய்திருக்கிறேன். நான் என்ன படித்திருக்கிறேன் என்றால், 10ம் வகுப்பு வரை படித்திருக்கிறேன். 4ம் பிரதி பெயரில் பட்டா இருந்ததை நான் இன்றைய தேதி வரை ஆட்சேயபனை செய்ததில்லை என்றால், தெரிந்தவுடன் நீதிமன்றத்திற்கு வந்து விட்டேன். வா.சா.ஆ.6 வில்லங்க சான்றிதழ் தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், ஆமாம். அந்த சான்றிதழில் உள்ள பதிவுகளை படித்து பார்த்தேனா என்றால், படித்தேன் தற்போது நியாபகம் இல்லை. அதில் உரிமையில் நீதிமன்றம், இரணியலில் நடைபெற்ற அசல் வழக்கு 182/2000 குறிப்பு இருக்கிறது என்றால், அந்த வழக்கு என் அம்மா தான் தாக்கல் செய்தார் அதன் முழு விபரமும் எனக்கு தெரியாது. அந்த வழக்கு விசாரணை நடைபெற்ற விபரம் தெரியுமா என்றால், நான் சிறிய குழந்தையாக இருக்கும் பொழுது பல முறை வந்துள்ளேன். வழந்த பிறகு ஒரு முறை தான் வந்திருக்கிறேன். என் அம்மாவிடம் என்ன வழக்கு என்று கேட்டேனா என்றால், கேட்டேன். நிறைவேற்றுகை மனு எண்.51/2005ல் இந்த வழக்கின் 2ம் பட்டிகை சொத்து இடைக்கால ஜப்தி செய்யப்பட்ட விபரம் என் அம்மா சொன்னாரா என்றால், என் அம்மா சொல்லவில்லை. அந்த வழக்கில் இந்த வழக்கின் 3ம் பிரதி நிறைவேற்று மனுவில் இடைக்கால மனு எண்.59/2012 மனு தாக்கல் செய்து அந்த சொத்து அவருக்கு முழு உரிமை பட்டது என்று ஜப்தியை நீக்க சொல்லி கேட்டிருந்தார் என்றால், அதெல்லாம் சுத்த பொய். அந்த மனு 02.12.2014ல் நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டது என்றால், அது போல் கிடையாது பொய். அந்த மனு உத்திரவிற்கு பிறகு தான் இந்த வழக்கின் 2ம் பட்டிகை சொத்தை 3ம் பிரதிவாதி 4ம் பிரதிவாதிக்கு எழுதி வைத்தார் என்றால், தெரியாது. ஆனால் அது பொய். 3ம் பிரதிவாதி தாக்கல்

செய்திருந்த கோரிக்கை மனுவிற்கு எதிராக சீராய்வோ மேல் முறையீடோ தாக்கல் செய்யப்படவில்லை என்றால், தெரியாது. இந்த வழக்கில் 2ம் பட்டிகை சொத்து 1ம் பிரதிவாதி கணபதி என்பவருக்கு முழு உரிமை பெற்ற சொத்து என்பதால், அதனை 3ம் பிரதிவாதி ஐயப்பனுக்கு எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், கணபதிக்கு முழு உரிமை கிடையாது. 3ம் பிரதிவாதி அந்த சொத்தை 4ம் பிரதிவாதிக்கு கிரயம் கொடுத்து 4ம் பிரதிவாதி அங்கு விடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால், நான் என் அப்பாவின் சொத்தில் பங்கு கேட்கிறேன். நான் அப்பா உயிருடன் இருக்கும் போது சொத்தில் பங்கு கேட்க முடியாது என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும், கால வரையறை சட்டத்தால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. எனக்கு தெரிந்தவுடன் நான் வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன். 02.04.2025 ல் தான் ஆவணங்கள் பற்றிய விபரம் தெரியும் என்று கற்பனையாக இந்த வழக்கு தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், இல்லை. வழக்கு பட்டிகை சொத்தை அடிக்கடி பார்த்து வரகிறேன் என்று சொல்வது பொய் என்றாலும், நான் அந்த பக்கம் சென்றதே இல்லை என்றாலும், சரியல்ல.

நான் அவ்வப்போது சென்று பார்த்து வருவேன். சுப்பிரமணிய நாடாரின் வாரீசுகளை தரப்பினராக சேர்க்காமல் வழக்கு நிலைக்காது என்றால், சரியல்ல. நான் கணபதிக்கு தான் பிறந்தேன். இந்த வழக்கில் நான் இந்து கூட்டுக் குடும்ப சொத்து என்று சொல்வது அவ்வாறு இல்லை என்பது பொய் என்றால், சரியல்ல. நான் இந்த வழக்கில் கோரியுள்ள அனைத்து பரிகாரங்களும் கிடைக்காது என்றால், சரியல்ல. 3 மற்றும் 4 பிரதிவாதிகளுக்கு எதிராக செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால், சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.